உ


# நாவலர் குரல்

நாவலர் புகழ் பரப்பும் நல்ல தமிழ் ஏடு

குரல் 2 | ஒலி 1 | மார்கழி 17 | 1987-01-01 | விலை : ரூபா 1-50


## முழக்கம்

# மீண்டும் அறிவாசாரம் காப்போம்

உலகில் நிலவிய பலவேறு நாகரிகங்களில் தமிழ் நாகரிகம் முதலிடம் வகிக்கின்றது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி (புறம்) என்ற இலக்கிய அகச் சான்றினால் மட்டுமன்று அது.

வேதகாலத்துக்கும் முன்னையதென அறியப்படும் சிந்துவெளி நாகரிகக் கண்டுபிடிப்பென்ற அகழ்வாராய்ச்சிப் புறச்சான்றினால் மட்டுமன்று அது.

தமிழினத்தின் அகவாழ்வு புறவாழ்வு என்ற இரண்டினும் இலௌகிகமும் ஆத்மிகமும் இரட்டைக் குழவிகள் போல ஒட்டிநிற்க அமைத்து உலக சாதனை விளைத்த தொல்காப்பிய இலக்கணத்தின் அதிமிகு தொன்மையினால் மட்டுமன்று அது.

இவ்வெல்லாவற்றையும் அளாவி இவற்றுக்கும் மேலாகத் தன்னைத் தோற்றிநிற்கும் அக் காரணம் அறியத்தகும்.

வாழ்வியற் சீருக்கு யதார்த்தத் தன்மை வழங்கும் குலாசாரம், குடும்பாசாரம், கலாசாரம் என்ற ஒவ்வொன்றினுக்கும் உயிரோட்டமாய் நின்றொளிரும் அறிவாசாரமே அது எனலாம்.

வாழ்வியலின் விழுமியங்களை அறம் பொருள் இன்பம் வீடு என நான்காக வகுத்துக்கொண்டு அறம் மட்டுமல்ல, பொருள் இன்பப் பேறுகள் கூட உலகாசாரப்படியல்ல, அறிவாசாரப்படியே இயலவைத்ததன் மூலம் தமிழ் நாகரிகம் மற்றை நாகரிகங்களுக்கப்பால் ஒரு எட்டு எட்டியிருத்தல் கண்கூடு.

எதனாற் சிறந்தது தமிழ் நாகரிகம்?
அறிவாசாரத்தாற் சிறந்தது தமிழ் நாகரிகம்.

முற்றறிவன் என்ற பெயருக்குரியவன் இறைவன் ஒருவனே. அவனை அறிந்து அவன் வழிநிற்கும் அறிஞர் வழிவந்ததே அறிவு. முனைவன் கண்டது முதனூலாகும் என்ற தொல்காப்பியர் கூற்றின் சூக்ஷ்மத்தை விசாரிக்க இவ் விளக்கம் உதித்தல் ஒருதலை. தமிழர் கல்விப் பாரம்பரியத்தின் கைகாட்டி இது.

எது கல்வி? முனைவன் வழிவந்த அறிவு நூல்களைக் கற்பதே கல்வி. எண், எழுத்து (தருக்கம், இலக்கணம்) என்ற இரண்டும் அதற்குக் கருவி.

இவைபற்றிய கல்வியே கல்வியென்றால் அதுவே கல்வியின் சத்துப்பிடிப்புள்ள (Potential) பாகம் என்பதர்த்தம்.

வாழ்க்கை வேண்டாததல்ல. வாழ்க்கை உபாய நூல்களும் கற்கவேண்டாதவையல்ல. ஆனால் மேற் கண்டவாறான அறிவு நூல் விளக்க ஒளியில் நடைபெற்றால் மட்டுமே அவையும் ஆற்றல் பெறும்; அறிவாசாரத்துக்கமையும்; கற்றதனா லாய பயனென் கொல்? என வினாவி வள்ளுவர் விடுக்கும் விடைக்கும் அமைவதாகும்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க)

# தேவாரத்தில் இடைச்செருகலா?-தப்பிதம்

இடைச் செருகல் என்றமாத்திரத்தே உண்மையாயிருக்கும் என்று எண்ணவைக்கிறது இன்றைய காலக் கெடுபிடி.

தேவாரத்தில் இடைச் செருகல் என்ற கருத்தும் அத்தகைய ஒரு கெடுபிடியின் பிரதிபலிப்பு என்றே கருதவேண்டியுள்ளது. சமீபத்திய ஈழநாடு வாரமலர் ஒன்றில் இக்கருத்து வியாச வடிவில் வெளிவந்ததும் 7-9-86 ஈழநாட்டில் அதற்கு விமர்சன ரீதியான மறுப்பொன்று வெளிவந்ததும் பிரசித்தம். இத் தொடர்பில் விமர்சன கர்த்தா சைவசித்தாந்த சரபம், வித்துவான் க. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நாவலர் குரல் மூலம் நன்றியும் பாராட்டுந் தெரிவித்தல் நமது முதற் கடமையாகும்.

ஞானியொருவர் தம்பெயர் உச்சரித்தலோ தம் பாடற் பலனைத் தாமுரைப்பதோ ஞான ஆசாரத்துக்கு விரோதம் என்ற கருத்துக் குறிக்கப்பட்ட சிலவகைத் தர்சனங்களில் உண்டென்று கேள்வி. சைவஞான தரிசனத்தில் அது இடம்பெறுவதில்லை.

அங்ஙனேல் சைவஞானிகள் தற்புகழ்ச்சியாளர்களோ, சுயவிளம்பரதாரிகளோ, தம்பாடலுக்குத் தாமே விமர்சனம் பண்ணுபவர்களோ என்பது கேள்வியாகாது. சைவம் பேணிவரும் சைவஞான இலக்கண விளக்கத்தில் அது வெளியாகும்.

சைவஞானி யொருவர் ஏகனாகி இறைபணி நிற்பவர்: அவரது செயல்நிலை முற்றிலும் ஆண்டான் அடிமைத்திறஞ் சார்ந்ததாகும்.

'அவனருளாலே அவன்தாள் வணங்குபவர்' சைவஞானி. எனில் தான்பாடுவதும் அவனருளாலேயே பாடுபவர். ஏனையோர்க்கு ஆன்மபோத வலுவால் நிகழும் பாடல் அவர்க்குத் திருவருளின் நேர்முக உந்துதலால் நிகழும். தமக்கு உள்ளமாயும் நாவாயும் நின்று சொல்லிக்கொண்டிருக்குந் திருவருள் எதைச் சொல்லுகிறதோ அதையே சொல்வதன்றி அவர் தம் புத்தியால் நினைந்து தம் போதத்தால் அறிந்து தாம் பாடுவதென்ற உணர்வுடன் எதையும் பாடுவதில்லை. இது சைவஞானத்திற் சம்பந்தப்படும் பிரத்தியேக விளக்கமாகும். அதன்படிக்கு, 'சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகித்' தம் நாவில் நின்று வசனிக்குந் திருவருள், 'சம்பந்தன் பாடல்', 'ஊரனுரைத்த தமிழ்' என்றாற் போல வசனிக்கும் பட்சத்தில் அவர் பாடலில் அது அப்படியே அமைந்துவிடும். ஆட்சேபனைக் கிடமின்றி என்றும் ஒப்பப்படுஞ் சைவஞான விளக்க உண்மை இதுவாதல் அறியத்தகும்.

இவ்வுண்மையை, மெய்ஞ்ஞானிகளாகிய நம் சமயாசாரியர்கள் பாடல்களே திருவருள் வாக்காக எழுந்து உணர்த்தி வைத்திருக்கும் முன்னோடி அறிவித்தல்களும் வேறாக உள்ளன.

'எனதுரை தனதுரையாக ஏறுகந் தேறிய நிமலன்', 'கழுமல நகர்ப் பழதிலிறை எழுதுமுரை தமிழ் விரகன் வழி மொழிகள் மொழிதகையவே' என்ற சம்பந்தர் பாடற்பகுதிகள் இரண்டும் அதற்கு அகச் சான்றாகும்.

பதிகந் தோறும் சம்பந்த சுவாமிகள் திருக்கடைக் காப்புப் பாடிய செய்தி பெரிய புராணத்திற் கிளந்தோதப் பட்டிருத்தல் இதற்குப் புறச் சான்றாகும்.

சம்பந்த சுவாமிகள் பாடிய பதிகம் அனைத்திலும் இவ்வாறிருத்தல் பற்றிச் சம்பந்தர் பாடல் முழுவதையுமே திருக்கடைக் காப்பு என்ற சிறப்புப் பெயரால் அநுபூதிமான்கள் அழைத்துவந்தமை அதற்குப் புறப் புறச் சான்றாகும்.

இன்னும் வேதசங்கிதைகளில் கிரியா காண்டத்தில் ஒவ்வோர் கிரியை முடிவிலும் இதற்கிது பலன் என வந்திருக்கும் வாக்குகள் இதற்கு அயற் சான்றாகும்.

அவை பழங்கதையெனில் இன்றைய யோகசுவாமிகள் பாடல்களில் ஒலிக்கும் அத்தகைய வாக்குகளுக்கென்சொல்வது?

அவை இடைச் செருகலாமெனில், நாமறிந்த யோகசுவாமி பாடல்களில் நாம் விழித்திருப்பவே நம்மையறியாமல் யாரோ இடைச் செருகல் பண்ணிவிட்டோரெனலாமா? அதனை உலகம் ஒப்புமா?

ஆகவே இந்த இடைச்செருகற் கருத்து மஹா தப்பிதமெனவே கொண்டு அமைக.

---

# கிழக்கு வரவேற்கிறது

**களுதாவளை**
**களுவாஞ்சிக்குடி**
*16-10-86*

தாங்கள் அனுப்பிய நாவலர் குரல் மாசிகை வரப் பெற்றோம். மிக்க மகிழ்ச்சி; நன்றி. தங்களுடைய முயற்சி நீதியானது; நேர்மையானது; அவசியமானது; அவசரம் தேவையானது; பாராட்டுகிறோம்.

தங்களுடைய மாசிகையின் ஆண்டுச் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்ள விரும்புகின்றோம். எனவே சந்தாத் தொகையினையும் அதனை அனுப்ப வேண்டிய முகவரியினையும் குறித்து அனுப்பும்படி வேண்டுகிறோம்.

பத்திரிகைக்கு வேண்டிய விடயங்களை எழுதி அனுப்புகின்றோம்.

மஹாவித்துவான் F. X. C. ஐயா அவர்களின் சார்பில் இதனை எழுதுகின்றேன்.

**அன்புடன்**
ஆ. அரசரெத்தினம்

# 'வீணுக்கு மல்ல; வேலை மினைக்கேட்டுக்கு மல்ல'

*(1)* சிவசமயத்தினர்களாகிய நாம் சினக்காமலும் வெறுக்காமலும் ஒத்துக்கொள்ள வேண்டியதோர் உண்மையுண்டு.

*(2)* நமது உடலும் உள்ளமும் அவற்றின் சுபாவ நிலையில் உள்ளவரையில் அவை பிராகிருத உடலும் பிராகிருத உள்ளமுமாம். இந்நிலையில் இவை சிவவழி பாட்டுக்கோ சைவக்கிரியைகளுக்கோ தகுதியானவை யாகா. இதுவே அவ்வுண்மையாம்.

*(3)* தெய்வநிலையமொன்றின் புனித பரிசத்தை ஏற்பதற்குத் தகுமளவு உடலின் பிராகிருதத்தன்மையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவ்வாறே தெய்வீக உணர்வு தன்னிடத்திற் பற்றுமளவுக்கு உள்ளத்தின் பிராகிருத நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும்.

*(4)* எமது உடல் முற்ற முழுக்க மாயைப் படைப்பு. அது சதா பரிசிக்கும் உலகப் பொருள்கள் ஒவ்வொன் றும் மாயாவிகாரமான படைப்பேயாம். இதனால் மாயைப் பண்பாகிய மயக்கத்தோடு கூடிப்போயிருத் தல் இதற்குத் தவிர்க்கமுடியாத ஒன்றாகின்றது. இன் னும் இவ்வுடல் இருவினைக்கீடாகப் படைக்கப்பட்டது. வினை அநுபவங்களுக்கே தொழிற்படுவது. வினைத் தாக்கத்தினலாம் விகார உணர்வுகளைப் பிரதிபலித்துக் கொண்டிருப்பது. ஆணவத்தின் குணமான நான் எனது என்ற முரட்டுச் சுபாவங்களோடே செயற்படும் அங்க அவயவங்களைத் தன்பாற்கொண்டது.

*(5)* எமது உள்ளமோ எனில் எப்பொழுதும் ஆணவ கன்ம மாயா சம்பந்தமான குணவிலாசங்களில் அளமளைந்துகொண்டிருப்பது. ஆணவப் பண்பான மறைப்புத் தன்மையும், கன்மச்சார்பான விருப்பு வெறுப்பியல்பும், மாயைச் சார்பான மயக்கநிலையும் இந்த உள்ளத்துக்கு ஏகபோக நிலைகளாயுள்ளன.

*(6)* புசித்தது சமித்ததும் பசிப்பதும் வியர்வை அழுக்கு நீங்கக் குளித்த ஈரம் புலர்ந்ததும் மறுபடி வியர்த்தலும் போல எமது உடல் உள்ள விகாரங்கள் ஒருகால் துடைக்கும்போது நீங்கியதுபோலிருப்பினும் அந்தப் பசுமையற்றஉடனேயே மீண்டும் பற்றிவிடுஞ் சுபாவமுள்ளன. ஆதலால்,

*(7)* ஆலய வழிபாடு செய்யும் ஒவ்வொரு தடவை யும் சைவக்கிரியை புரியும் ஒவ்வொரு தடவையும் உடலுளச்சார்பான பிராகிருதத் தன்மைகள் உடனுக் குடன் துடைத்துத் துடைத்துச் சுத்திகரிக்கப்படவேண்டி யனவாம்.

*(8)* ஆலயவழிபாட்டுக்கு முன்னோடியாக வேஷ்டி தோய்த்தல், ஸ்நானஞ் செய்தல், சைவ அநுஷ்டானம் பண்ணி விபூதிக்கோலம் பூண்டு சிவமந்திர செபஞ் செய்தல் இத்தனையும் அத்தியாவசியமான சுத்திகரிப் புக் கிரியைகளாக விதிக்கப்பட்டதும்,

சைவக்கிரியைக்கு முன்னோடியாக பூதசுத்தி, அந்தர் யாகம், புண்யாகவாசனம் முதலாயின அத்தியா வசியமான சுத்திகரிப்புக் கிரியைகளாக விதிக்கப்பட் டதும்,

வீணுக்கல்ல; வேலைமினைக்கேட்டுக்குமல்ல.

—நன்றி. திருவருள், மலர்: 1, இதழ்: 5.

## மன்னிக்கவும்

மனித முயற்சிகளை, சிற்சிலபோது ஊக்கித் துரிதப்படுத்துவதும் சிற்சிலபோது தணிக்கையிட்டுத் தாமசப்படுத்துவதுமாய் மனிதரின் சர்வப் பிரயத்தனங்களுக்குஞ் சவால்விடுப்பதாய் எல்லாவற்றையும் அளாவியிருப்பதான பரஇச்சை (Cosmic Will) என ஒன்றின் இருப்பை வெகுவாக உணர்கின்றோம். அதன் செயற்பாடு நாவலர் குரல் வெளியீட்டையும் விட்டுவைக்கவில்லை. அதனால் நேர்ந்த தாமத வசத்தால் நாவலர்குரலின் கடந்த மூன்று பிரசுரங்கள் உரியகாலத்தில் வெளிவரத் தவறியமைக்காக வருந்துகிறோம்.

'தைபிறக்க வழி பிறக்கும்' என்பதற்கிணங்கப்போலும் தைப் பொங்கலோடு நாவலர் குருபூசை மலரும் நாவலர் குரல் 2 ஒலி 1உம் அடுத்தடுத்து வெளிவருதல்மூலம் குறித்த தாமசத்தால் நேர்ந்த இழப்பை ஈடுசெய்துகொண்டு நேர்ந்த தவற்றுக்காக எம்மை மன்னிக்கு மாறு வாசக நேயர்களை வினயத்துடன் வேண்டுகிறோம்.

# நாவலர் பெருமானை உயிர்ப்பித்த உத்தமர்

**இளையதம்பி நினைவுநாள் 86-11-19. இப்போ இக் கட்டுரையை வெளியிட்டு அவர் நினைவுக்கு அஞ்சலி செய்கிறது நாவலர் குரல்**

போற்றுவோம் வாரீர்! என்ற அறை கூவல் கடந்த 31-10-68 தினகரனில் ஒலித்தது. 'நாவலர் ஐயாவுக்குச் சிலையமைத்துப் போற்றுவோம் நம்மவரெல்லாம் அவரை நினைவதற்கு அதுவே வழி' என்பது அவ்வொலியின் துவனி. 31-8-68 தினகரனில் வெளியான 'நாவலருக்குச் சிலை ஏன்' என்ற கட்டுரையின் சாரமும் அதுவே. 'சுவாமி மகாதேவா அவர்களை நினைவு கொள்வோம் வாரீர்!' இது 15-10-72இல் 181, ஜெம்பட்டா வீதியிலிருந்து தனிப் பிரசுரவடிவிற் புறப்பட்ட மற்றொரு அறை கூவல். இந்து போட் இராசரத்தினம் நினைவு விழாக் குழு அமைப்போம், 1983 முற்பகுதியில் நல்லூரில் ஒலித்துச் செயல் வடிவு பெற்றது இது. தமிழ், சைவம், தர்மம், நீதி என்பவற்றிற் பசி தாகங்கொண்டு சுயமாக முயன்று இறுதி மூச்சுவரை சுயநலமறந்து சோரணையோடுழைத்த யாழ் — மும்மணிகள் மேற்கூறிய அறை கூவல்களுக்கு ஏது புருஷர்களாயிருந்தவர்கள். இவர்கள் ஒவ்வொருவரதும் நூற்றாண்டு நினைவைத் தோற்றுவித்து அவர்களை எல்லோரும் நினைய வழி செய்தவர்; அதற்காக அறைகூவல் விடுத்த ஒரேயொருவர் கரம்பொன் திரு. க. இளையதம்பி.

சிவனடியார்களை நினைந்தே சிவனை நினைய வேண்டும் என்பது சைவநெறியில் விறன்மிண்ட நாயனார் மூலம் பிரஸ்தாபிதமான ஒரு விதி, அதன் மூலம் சிவனடியாரை நினைதல் முதன்மை பெறும். காரணம் மற்றெதுவுமன்று; தம் உருவினாலுந் திருவினாலும் சிவத்தைத் தம்மிற் பிரதிபலித்துச் சிவனை மற்றெவரும் நினையுமாறு நினைவிக்கிறவர்கள் அவர்கள் என்பதே. அவ்வுண்மை விளக்கத்தின் விளக்கில் திரு. இளையதம்பியை நினைய வேண்டுவதன் அவசியமும் இனிது விளங்கும்.

1968க்கும் 1976க்கும் இடைப்பட்ட காலம் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சிக்காலம் என்ற புகழுக்குரியது, நாவலர் நூற்றாண்டுப் பிரகடனம், அகில இலங்கை ஆறுமுக நாவலர் சபைத் தோற்றம், நாவலர் சிலையெடுப்பு வைபவம், ஊர்வலப் பெருவிழா, நாவலர் தேசிய வீரர் ஆம் பிரகடனம், நாவலர் ஞாபக முத்திரை வெளியீடு, நாவலர் சொத்துக்கள் தேசியமயமாக்கப்படல், நாவலர் கலாசார நிலையம் என்ற பல்வேறு புதுமலர்ச்சிகளையும் கண்டுள்ளது இக்காலமே. 1968இல் கொழும்பில் நடைபெற்ற மறைமலைஅடிகள் விழாவுஞ்சரி அங்கு 1972இல் இடம்பெற்ற மகாதேவ சுவாமிகள் விழாவுஞ்சரி மேறிகுறித்தவற்றின் சூழ்நிலையதிர்ச்சிகளாக அமைந்தனவே.

நாவலர் சார்பான மேற்குறித்த பணிகளில் அகில மளாவிய அளவில் ஈழநாடு முழுமையுமே பங்குகொண்டுள்ளது குறிப்பிடத் தகுமளவு விசேடமாகும். நிர்வாகத்தில் அரசாங்கத்துறை, தனியார்துறை அனைத்தும், உத்தியோகத் துறையில் உயருத்தியோகஸ்தர், சாமான்ய உத்தியோகஸ்தர் அனைவரும், வர்த்தகத்துறையில் பெரு வர்த்தகர், சிறு வர்த்தகர் அனைவரும் பிரதேச ரீதியில் வடக்கு, கிழக்கு, மத்திய மலைநாடு அடங்கலும் எழுத்துத் துறையில் தேசிய எழுத்தாளர், இலக்கிய எழுத்தாளர் அனைவரும், பத்திரிகைத்துறையில் தமிழ், ஆங்கிலம், சிங்களத் தினசரிகளுங்கூட எல்லாரும் எல்லாமும் ஏகோபித்த உணர்வொடு நினைக்குமாறு, ஏற்ற ஏற்ற சாதனங்கள் கோலி நாவலர் நினைவு கொப்போடிக் கிளைகிளைத்துப் பரக்க அப்போதைக் கப்போதெல்லாம் அவ்வச் சாதனங்களின் சூத்திரதாரியாக நின்று பணியாற்றிய அருமை திரு. இளையதம்பியின் அருமை.

இளையதம்பியின் பெயராற் பிரசித்தி பெற்றிருந்த நடைமுறைத் தமிழியக்கம் நாவலர் சபையின் முன்னோடி. அதைச் செயற்களமாக வைத்துக் கொண்டு இளையதம்பி தனது சுயமான உள்ளக் கிளர்ச்சிகளுக்கு உருவங்கொடுத்த வரலாறு நாவலர் சபை நிகழ்ச்சிகள் முழுவதினும் இழையோடிக் கொண்டிருக்கும் ஒரு இரகசியமாம். 26-7-70 தினகரன் நாவலரைத் தேசிய வீரர் வரிசையிற் சேர்த்து நினைவு முத்திரை வெளியிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாக நாவலர் சபை தீர்மானமொன்று நிறைவேற்றியிருந்த செய்தியைத் தெரிவித்துள்ளது. இதற்குச் சிலமாதங்கள் முந்தியே நாவலரைத் தேசிய வீரர் பட்டியலிற் சேர்த்துக் கொள்ளுமாறு கல்வியமைச்சுக்கு இளையதம்பியின் விண்ணப்பம் போய்ச் சேர்ந்து, 24-2-70இல் இரண்டாவது நினைவூட்டல், 12-3-70இல் மூன்றாவது நினைவூட்டற் கடிதங்கள் அனுப்பப்பட்டு 5-7-70இல் ஐந்தாவது நினைவூட்டல் தந்தியும் அனுப்பப்பட்டு 5-7-70இல், 'நாவலர் ஐயாவைத் தேசிய வீரராகப் பிரகடனஞ் செய்யுங்கள்' எனப் பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு ஒரு மகஜரும் அஞ்சல் செய்யப்பட்டிருக்கக் காண்கின்றோம். இவை ஒவ்வொன்றும் நடைமுறைத் தமிழியக்கப் பேரிலும், இளையதம்பி என்ற சொந்தப் பெயரிலும் மாறி மாறி நிகழ்ந்திருக்கின்றன. பிரபஞ்சத்தோடு கலப்பினால் ஒன்றாய் இருந்து இயக்கும் அதேவேளை அதற்கு வேறாயும் நின்று செயலாற்றும் சிவன் செயல்போல, நாவலர் சபையின் செயற்குழு உறுப்பினர் பன்னிருவருள் ஒருவராயிருந்து சபைக் காரியங்களை இயக்கும் அதேவேளை அதற்கு வேறாய்த் தானே தனியாயிருந்தும் ஆவனவற்றை விரைந்து கூட்டிவைக்கும் இளையதம்பியின் பேரார்வப் பண்புக்கு இது சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

நாவலரைத் தேசிய வீரராக்குதல் சார்பாக இளையதம்பியின் கிளர்ச்சி இதற்கு முதல் வருடத்திலேயே

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க)

# வேட்டைத் திருவிழா எதற்காக?

சிவாலயத்தில் நிகழும் நித்திய நைமித்திகங்கள் அனைத்தும் ஆன்மலாபப் பேற்றையே குறிக்கோளாகக் கொண்டவை. அதாவது, பூசிப்போரும் வழிபடுவோரும் ஆன ஆன்மாக்கள் தத்தம் பரிபக்குவ நிலைக்கேற்கு மளவு தமது பிரபஞ்ச மயக்கத்திலிருந்து விடுபட்டுத் தெய்வீக நெறியில் முன்னேறச் செய்வதே நோக்கமாகக் கொண்டவை. நைமித்தியமென உள்ளவற்றில் கொடியேற்றம் முதல் தீர்த்தோற்சவம் ஈறாக நிகழும் விழாக்கள் அவ்வகையில் விசேடம் பெற்றவை; தத்துவ ரீதியான நுண்பொருள் விளக்கங்களுக்குரியவை.

திருவிழாக்களுள் முக்கியமானதும் கவர்ச்சிகரமானதுமான ஒன்று வேட்டைத் திருவிழா. தீங்குபயக்குந் துஷ்டமிருகங்களை அழிக்குந் தொழில் வேட்டை எனப் படும். துஷ்ட மிருகங்களின் உறைவிடமான காட்டில் இது நிகழ்தற்பாலது. பண்டைய நாட்களில் இராசாக் களின் லோக க்ஷேமத்துக்கான கடமைகளில் வேட்டையாடுதலும் ஒன்றாக இருந்திருத்தல் பிரசித்தம். புற உலகில் நிகழும் இவ்வேட்டைக்குச் சமானமான ஒரு வேட்டை அகவுலகிலும் அதாவது மனிதரின் ஆத்மீக வாழ்விலும் நிகழ்ந்துகொண்டிருப்பது ஞானிகளின் அறிவுக் காட்சியிற் காணப்படும் ஓர் உண்மை. புற உலகில் இவ் வேட்டை அரசனால் நிகழ்த்தப்படுவதுபோல அகவுலகில் இவ்வேட்டை அவ்வரசர்க்கும் அரசனும் நிலையிலுள்ள இறைவனால் நிகழ்த்தப்படும்.

சம்சார மோஹத்தில் லயித்துப் போயிருக்கும் நம்மவர் நிலையிலுள்ள ஆன்மாக்களின் அகவளாகம் ஒரு காடென்றே மாசறு காட்சியிற் காணப்பட்டுள்ளது. ஆங்காரம் என்ற புலியும் அறிவுமதம் என்ற யானையும் இழிமைத்தனம் என்ற பன்றியும் மாண்பிறந்த மானம் எனுஞ் சிங்கமும் குரூர சுபாவம் என்ற கரடியும் குள்ளத்தனம் என்ற நரியும் முதலாக எத்தனையோ பல தீய விலங்குகளின் உறைவிடம் அந்தக் காடு. ஐம்புலன்கள் என்ற வேடர் ஆன்மா என்ற வழிப் போக்கனை அலைத்து வருத்திக்கொண்டிருக்கும் வனாந்தரக் காடு அது. அதே காட்டிலேயே ஆன்மாவுக்குப் பரமான்மாவான இறைவனும் உலாவிக் கொண்டிருக்கிறார் என்பது ஒரு புதுமை. துஷ்டவிலங்குகளின் குரூரமும் வேட்டுவச் சதியும் நிரம்பிய அக்காட்டின் நிலையை அநுசரித்து இறைவனும் வேடுவனாகவே உலாவிக்கொண்டிருக்கிறார் என்பது அதற்கும் மேலான புதுமை. இது இறைவனைத் தம் அன்பின் அகத்தவனாகக் கண்டுகொண்டு ஆராதித்து வந்த மாணிக்கவாசக சுவாமிகளின் மாசறு காட்சியாயிருத்தல் அறியத்தகும்.

வேவத் திரிபுரஞ் செற்ற வில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள் சூழ
ஏவற் பணிசெயுந் தேவர் முன்னே
எம்பெரு மான்தான் இயங்கு காட்டில்

என்பது அவர் காட்சி (திருவார்த்தை 6).

இதில், கடிநாய்கள் என்றது காவல் நாய்களை. வேதத்தை நாய் என உருவகித்தல் வேதகாலந் தொட்ட வழக்கு. காவல் தெய்வமாகிய பைரவருக்கு வாஹனமாய் அமைந்த நாய் வேதம். பைரவருக்கும் நாய்க்கு மிடையிலான பொருத்தம் காவல் தன்மை ஒன்றே. காவல் நாய்களாகிய வேதங்கள் தன்னைச் சூழ எம் பெருமானாகிய சிவன் உலாவுகின்ற காடு நமது அக வளாகமாகும். அங்கு அவர்க்கு ஏவற் பணி செய்யுந் தேவர்களாகிய பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலியோர் உண்மையும் சிவ யோகக் காட்சியிற் புலனாவது (சுவாதிட்டானத்திற் பிரமா, மணிபூரகத்தில்விஷ்ணு, அநாஹதத்தில் உருத்திரன்) அத்தேவர்களின் முன்னே வேதங்களாகிய காவல் நாய்கள் சூழச் சிவபெருமானாகிய வேடன் உலாவுங் காட்சியைப் புலப்படுத்துவது இத் திருவாசகம். அங்ஙனம் உலாவுதலின் மூலம் மேற் குறித்தவாறான துஷ்ட விலங்குகளைத் தருணங் கண்டு கொன்றழித்து அவற்றின் நிர்ப்பந்தத்திலிருந்து விலகி ஆன்மா மேற்கதியடைய உதவி வருதல் சிவனது அருட் செயலாம். அதுவே அவர் நோக்கம் என்பது "வேவத் திரிபுரஞ் செற்றவில்லி" என்ற தொடர் மூலம் சூசிக் கப்பட்டிருத்தல் கண்கூடு. ஆன்ம அகவளாகத்தில் உள்ள ஆணவ கன்ம மாயைகளான திரிபுரங்களையும் வேகும் படி அழித்தவர் என்பது மற்றுந் தீமைச்சாதனங்களையும் அழிப்பவர் என உணர்த்தும் கருத்துடை அடையாய் வாய்த்துள்ளது.

ஆலயங்களில் நாம் காணும் வேட்டைத் திருவிழாவில் இதனை உணர்த்தும் அறிகுறிகள் (Symbols) பல அமைந்திருத்தல் கண்கூடு. காலதேச வசதிகளுக்கேற்ற அளவில் ஒரு செயற்கைக் காடு; வெவ்வேறு விலங்குகளின் இருப்பை உணர்த்தும் வெவ்வேறு காய்கறிகள் (பூசினி, புடோல், கத்தரிக்காய் ஆதியன); சுவாமி கையில் அம்பும் வில்லும்; வாஹனம் வேட்டைக்கு உதவுந் தன்மையிற் சிறந்த குதிரை. இவற்றுடன் எல்லாத் தீமைகளையும் ஒட்டுமொத்தமாக உணர்த்தக் கூடிய ஒரு அசுரனின் அறிகுறிப் பொருளாகப் பழக்கப் பட்டுப்போன வாழையொன்று. வேட்டையாடும் பாவனையிலான சுவாமியின் அசைவு. அசையுந்தோறும் குறித்த பொருள்களில் ஒவ்வொன்று வெட்டப்பட்டு வந்து முடிவில் வாழை வெட்டிச் சாய்க்கப்படுதல் என்ற வகையில் மேற்காட்டிய தத்துவ உண்மையின் அறிகுறிப் பண்பு (Symbolism) வேட்டைத்திருவிழாவில் அமையும் பாங்கு அறிந்தின்புறத்தகும்.

வெளிக்கு வேடிக்கை விநோதக் காட்சியாகிய வேட்டையாடலாய்த் தோன்றி அந்தரங்கத்தில் ஆன்மிக ஈடேற்றங் கருதிச் சிவன் புரியும் அருளாடலாய் மிளிர்வது இவ்வேட்டைத் திருவிழாவின் சிறப்பாகும்.

மாதிரிக்குச் (Formality) செய்யுமளவிலான விளக்கம்மட்டில் அமையாது தத்துவப் பின்னணியிலான உண்மை (reality) விளக்க உணர்வுடன் இது போன்ற நைமித்திகக் கிரியைகள் செய்யப்படுவதால் ஆன்மீக ரீதியில் எவ்வளவோ நன்மைகள் விளைய இடமுண்டு.

## நாவலர் பெருமானே....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்படத் தொடங்கி விட்டதாகத் தெரிகின்றது. 12-1-69 சிந்தாமணியில், 'ஆறுமுக நாவலரைத் தேசிய வீரராகக் கொள்ள வேண்டும்' என்ற தலைப்பில் 'இளைய தம்பி, நடைமுறைத் தமிழியக்கம்' என்ற விலாசத்தில் பிரசுரமாகியுள்ளது ஒரு கட்டுரை. அதே பத்திரிகையின் அன்றைய ஆசிரிய தலையங்கம் 'தேசிய வீரர்' எனத் தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. நாவலர் தேசிய வீரர் என்ற கிளர்ச்சியை ஆரம்பித்து வைத்த பெருமை நடைமுறைத் தமிழியக்கத்துக்கே உரியது' என்ற கருத்து அதே பத்தியில் ஆசிரியர் அபிப்பிராயமாக வெளிவந்திருத்தல் காணலாம்.

இதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னகவே 30-8-69 சிந்தாமணியில் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகத்தின் விசேட கட்டுரையாக, 'நடைமுறைத் தமிழியக்கம் நாவலர் சபையின் தாய்' என்ற விரிவான வியாசமொன்று திரு. இளையதம்பியின் நிழற் படத்துடன் பிரசுரமாயிருக்கிறது. அவ்வியாசத்தில் 'சில பிறந்த கதை' என்ற உபதலைப்புடனை பந்தியில் இடம்பெறும் பின்வருங் கூற்றுக்கள் சிந்திக்கற்பாலன.

"இப்படியாக நமது வியாபாரிகளும் அவர்களின் கீழுள்ள ஊழியர்களும் தமிழை ஒழித்துத் தொழிலை வளர்த்து வரும்போது, ஒரு வர்த்தக ஸ்தாபனத்தில் மனேஜராக வேலை பார்க்கும் திரு. க. இளையதம்பி தமிழுக்காக உயிரைக் கொடுக்கவும் அதற்காக முள்மிதியடியின் மீது நடக்கவும் தயாராக இருக்கிறுரென்றல் அவருடைய தமிழ்ப்பற்றை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?

திரு. இளையதம்பியைப் பார்த்ததுமே என் மனதில் ஒருவித பதிவு உடனடியாகவே ஏற்பட்டது. முகத்திற் சாந்தமும் கண்களில் நேர்மையும் பிரதிபலித்தன. அழகான பல்வரிசையைக் காட்டும் கள்ளங்கபடமற்ற சிரிப்பு உள்ளத்தின் வெள்ளைத்தனத்தை விளக்கிற்று. நெஞ்சில் உறுதியும் எடுத்த காரியத்தை எத்தகைய இன்னல் குறுக்கிட்டாலும் நடைமுறையிற் செய்து முடிக்கக்கூடிய பொறுமையும் உடையவர் இந்த நடைமுறைத் தமிழியக்கக்காரர் என்பது தெரிந்தது. அத்தோடு இவரிடம் நிரம்பியிருக்கும் நாவலர் பக்தி அசல் பக்திதான் என்பதும் போலியல்ல என்பதும் புலனுயிற்று".

திரு. இளையதம்பியின் தமிழ்ப் பற்றும், நாவலர் பக்தியும், அவர்தம் உத்தரவாதத் தன்மையும் எத்தகையன என்பதற்குக் குறைந்த பட்ச விளக்கங்களாக இக் கூற்றுக்கள் அமையும்.

யதார்த்தத்தில் இவை சார்பான அவர் தம் ஆக்க ஊக்கப் பண்புகள் பெருமளவில் தன்னிழப்பு நிலையைச் சார்ந்தனவாயும் 'உண்மைத் தொண்டு' இலட்சணத்துக்கு அணுக்கமானவையாயும் இருந்த நிலை சுவாரஸ்யமானது.

தன்னுழைப்பும் தன்நேரமும் ஒட்டு மொத்தமாகத் தன் கிருஹ தர்மத்துக்கே என்னும் சாமானிய மனித தர்மத்திலிருந்து வெகுதூரம் விடுபட்டநிலை இளையதம்பியின் நிலை. தன் உழைப்பில் தனக்கும் தன் குடும்பத்துக்குமான அத்தியாவசிய தேவைக்குரியதும் தன் நேரத்தில் மனேச்சர் கடமைக்குரிய எட்டே எட்டு மணித்தியாலமுந் தவிர மீதம் முழுவதும் நடைமுறைத் தமிழியக்கத்துக்கும் நாவலர் சபை முயற்சிகளுக்குமாகவே அர்ப்பணித்துக்கொண்டிருந்தவர் இளையதம்பி. சாதாரண வாழ்வு நிலையிலிருந்து தொண்டுநிலைக்குத் தாவும்ஒருவரின்வரலாற்றின் முதற்கட்டம் இது.ஏதொன்றிலும் குறைந்தபட்சச் சிரமத்துடன் கூடுதலான பலன் பெற அவாவும் உளப்பாங்கு சாதாரண வாழ்நிலைக் குரியது. பலன் விளைவும் விளையாமையுமான இரண்டு நினைவையும் பின்னிட்டுக்கொண்டு எடுத்த கருமத்தில் இடையீடில்லா ஈடுபாடுற்றுத் தொடர்ந்து அதனுல் வரும் இளைப்பிற் சுகானுபவங் காண்பது சாதாரண வாழ்வு நிலைக்கு வெகுதூரம் அப்பாலான தொண்டு நிலைக்கு வேண்டுவதொன்று. தன் ஆரோக்கியத்திற் சருவுமெனக் கண்டால் தருமப் பணியிலிருந்து சற்றே சறுக்கிக் கொள்ளும் நிலை சாமானியம். அதன் எதிர்க் கோடியில் நிலை கொள்வது தொண்டுநிலை. நம் கண் பார்வையையும் கருத்து மதிப்பீட்டையும் நம்புமளவுக்கு நாமெல்லாம் அறிந்தபடி இளையதம்பியின் போக்கு முழுவதும் தொண்டு நிலைக்கே தம்மை ஆளாக்கும் போக்கு என்பதிற் சந்தேகமில்லை. தான் தலையிடும் பணிகளில் தன் ஆத்தும எழுச்சி முழுவதையும் ஒருங்கமைய முன் வைத்துத் தன் நாமரூபங்கள் இரண்டையும் இயலுமளவுக்குப் பின்வாங்கிக் கொள்ளும் தொண்டிலக்கணமும் இளையதம்பியிடம் வெகு அலாதியாயிருக்கும்.

இந்த இளையதம்பியை இன்றும் என்றும் நினைவதே நியமம். நினைவோம்.

---

## நாவலர் குருபூசை மலர்

நாவலர் குருபூசையை முன்னிட்டு நாவலர் பணி மன்றம் வெளியிட இருக்கும் குருபூசை மலர் பெப்ரவரி மாதம் முதல்வாரத்தில் வெளியிடப்படும். முதலில் திருநெல்வேலியில் நடைபெறும் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து இணுவில், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும் அறிமுகவிழாக்களை நடாத்தப் பணி மன்றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# "ஞாயிறு போற்றுதும்"

செங்கதிர்த் தேவனைப் போற்றுவோம் — அவன்
எங்க ளறிவினைத் தூண்டி நடத்துக.

—சுப்பிரமணியபாரதியார்

* * *

ஓம் தத்சவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய திமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத்.

—காயத்ரீ மந்திரம்

மொழியியல்பால் தேனும் கற்கண்டும் போல நாவிற்கு வேறுபட இருந்தாலும் குறித்த இரண்டு பகுதியும் உணர்த்துவது ஒன்றையேதான். பழைய வேத மந்திரமாகிய காயத்திரிப் பொருளை வெகு லாகவமாக, செந்தமிழில் தந்துள்ளது பாரதியாரின் கவிதைவளம்.

விவேகியாயிருந்தும் தன் பாடவிஷயங்களை அசட்டை பண்ணும் பிள்ளைக்குச் சூரியன் தாக்கம் பின் மூளையில் தான் உளதெனவும் அது முன்மூளைக்கு மாறும் போதே அதற்குப் படிப்பிற் கூர்மை நேரும் எனவும் சொல்கிறார் சோதிடர். ஆம்! அறிவு நிகழ்ச்சிக்கு ஆதர வளிப்பவன் சூரியன்தான். சீவர்களாகிய நம்பேரிற் சூரியனுக்கிருக்குஞ் செல்வாக்கின் ஓரம்சம் இதுவாகும்.

சாதாரணமாக நிகழும் நமது உடலியக்கமே சூரியன் இல்லாமலில்லை என்பதுமொன்று. நமது உடலியக்கத்துக்கு நேர்முக சாதனமாயிருப்பது ஜீவசக்தி என்ற ஒன்று. அது சூரியனிடமிருந்து வந்து நமது மண்ணீரல் வழியாகச் சதா உடலிற் புகுந்துகொண்டிருக்கிறது. அதனுபகாரத்தினால் நமது உடல்வளாகத்திலுள்ள ஐந்து கோஷங்(உறை) களுள் இரண்டாவதாகிய பிராண மயகோசம் இயங்குகின்றது. பிராணமய கோசத்துக்கு உள்ளாயிருக்கும் மற்றைய மூன்று கோசங்களின் இயக்கமும், வெளியாயிருக்கும் அன்னமய கோசத்தின் இயக்கமும் அதனாலேயே நிகழ்கின்றன. சூரியனில்லாத இராவேளையிலும் பகலிற் சேர்த்து வைக்கப்பட்ட சூரிய சக்தியின் உதவியாலேயே உடலின் பிராணமய கோசம் இயங்குகிறது. பின்னிரவிற் சோம்பரும் சோர்வும் அதிகரிப்பதன் காரணம் பகலில் உறிஞ்சிவைக்கப் பட்டிருந்த சூரிய சக்தியின் அளவு இரா ஆக ஆகப் படிப்படியாகக் குறைந்து வருதலேயாம். சூரியோதயம் ஆரம்பிக்கும் வேளையாகிய வைகறையில் துயிலெழும் போது புத்தூக்கம் ஏற்படுவதும் அவ்வேளையிற் பழைய படி சூரிய சக்தியை உள்ளிழுக்கும் வாய்ப்பு இருத்தல் காரணமாகவேயாம். விடியற்காலையில் சர்வபிராணிகளுக்கும் புதிய உற்சாகம் நிகழ்வதும் சர்வ சிருஷ்டிகளிலுமே ஒரு புதுவிளக்கம் மிளிர்வதும் ஆகியவற்றின் இரகசியமும் இதுவேயாம் என்கின்றனர் ஞான திருஷ்டியாளர்.

அண்டத்திலுள்ளவற்றுக்குச் சமாந்தரமான ஒவ்வோரம்சம் பிண்டத்திலுமுள்ள தென்கிறது யோகக் காட்சி. அதன்படி தமது உடலின் உள்வளாகத்திலும் சூரியன் உண்டு. பிராணமய கோசத்திலுள்ள ஆறு தாரங்களில், சுவாதிட்டானம்,மணிபூரகம் என்ற இரண்டுக்கு மிடைப்பட்ட பிரதேசம் வாயிலாக அதனியக்கம் நடைபெறும். யோகசாதனையாளர்களுக்கு ஒரு கட்டத்தில் அந்தச் சூரியன் மூலாதாரத்தைச் சுற்றிக் கீழ்ச் சென்று மேலெழுந்து சிரசையடையும். அந்நிலையில் அங்குள்ள சந்திரனோடு கலந்து மீளாதிருந்து பெரு விளக்கத்தை ஏற்படுத்தும் என்பது திருமந்திரத்தில் இடம்பெறுந் திருமூலரின் யோகக் காட்சி.

"பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்குங் காணவொண்ணாத அரும்பொருள்
நீருக்குந் தீக்கும் நடுவே யுதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே"

"மண்ணை யிடந்ததன் கீழோடும் ஆதித்தன்
விண்ணை யிடந்து வெளிசெய்து நின்றிடும்"

— திருமந்திரம் 7ஆம் தந்திரம், ஆதித்தநிலை 8, 9.

[பார் - மூலாதாரம். நீர் - மணிபூரகம். தீ - சுவாதிட்டானம். மண் - மூலாதாரம். விண் - சிரசின் மேல் வெளி]

இந்த ஆதித்த நிலை குண்டலினி சக்தியின் உபகாரத்தால் ஏற்படுவது. விநாயகர் தனக்கு உள்ளுக்குள்ளாயிருந்து, "மூலா தாரத்து மூண்டெழு கனலைக் காலா லெழுப்புங் கருத்தறிவித்தமை"யையும் "அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்......" காட்டியமையையும் ஔவையார் தமது விநாயக ரகவலில் விளக்கியிருத்தலுங் காணலாம்.

இனி, சிவதரிசனம் சூரிய தரிசனம் வாயிலாகவே லபிக்கும் என்பது சிவாகமக் காட்சி. 'சௌரமண்டல மத்யஸ்தம் சாம்பம் சம்சார பேஷஜம்' — சூரிய மண்டல நடுவிலுள்ளவனும் அம்மையோடு சேர்ந்தவனும் சம்சார நோய் மருந்தும் — எனவே சிவத்தியானம் உச்சரிக்கப்படுகிறது. ஆலய அமைப்பிற் கோபுர வாய்தலுக்கு வலது பக்கத்திற் சூரிய சந்நிதி அமைகிறது. சூரிய சந்நிதி அமைக்காத இடங்களில் வாசற்படியிலாவது சூரியனை ஆவாஹித்துப் பூசித்த பின்பே கோயில் மூர்த்திக்குப் பூசை செய்யும் வழக்கமுண்டு. ஆன்மார்த்த பூசையிற் சிவபூசைக்கு முன்பு சூரிய பூசை தவறாநியதியாயுள்ளது.

மேலும், அருவமாகிய சிவசக்தி பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்து நின்று உயிர்களின் அநுபவத்திற்கு வேண்டுவனவற்றை ஆக்கலும் பதஞ்செய்தலும், அநுபவிப்பித்தலுமாகிய காரியங்களை விளக்குதற்கு நிதர்சனமான உதாரணமாகச் சூரியசக்தியையும் அதன் செயற்பாட்டையும் திருவருட்பயன் எடுத்துக் கூறுகின்றது. "பெருக்க நுகரவினை பேரொளியாய் எங்கும் அருக்கனென நிற்கும் அருள்" — திருவருட்பயன் அருளுரு நிலை. இத்தன்மையை முன்னிட்டுச் "சூர்ய: ப்த்ரயக்ஷ தேவதா" சூர்யன் கண்கண்ட தெய்வம் என்கின்றது வேதம்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய வீரர் நாவலர்

திரு. செ. ஞானசேகரன், தலைவர், இந்துமன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்

இந்துசமய வரலாற்றிலே காலத்திற்குக் காலம் பல அறிஞர்களும், மகான்களும் தோன்றிச் சைவத்தையும், தமிழையும் வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றுச் சான்றுகள் பகருகின்றன. இந்த வகையிலே 19ஆம் நூற்றாண்டிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதாரம் செய்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது பணியினை நாம் மூன்று பெரும் பகுதிகளில் அடக்கலாம். அவை கல்விப் பணி, சமயப்பணி, சமூக தேசியப் பணி என்பனவாகும். நாவலரை நாம் இந்த மூன்று நோக்குகளிலே வைத்து மதிப்பிட வேண்டும். சிலர் நாவலரைத் தனியாக ஐந்தாம் குரவர் என்று மட்டும் கருதுகின்றார்கள். இது தவறான ஒரு கருத்தாகும். நாவலரை நாம் சமய வாதியாக நோக்காது, அவரது வாழ்க்கையினை முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் அவர் ஒரு காலகட்டத்தின் தேசிய வீரராகத் திகழ்ந்தமையினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலங்கையிலே அந்நியர் ஆட்சி தலைதூக்கி நின்றது. இவர்களது ஆட்சியிலே ஒரு பகுதி மக்களது சுதந்திரம் பறிக்கப்பட்டது. இந்தச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாவலர் அரும்பாடுபட்டு உழைத்தார். ஆட்சியாளரின் விருப்பத்தின் படியே சகல நிர்வாகமும் நடைபெற்றன. சமயப் போட்டி பூசல்கள், கிறிஸ்தவர்களுக்கு முன்னுரிமை, சைவ மக்கள் எல்லா வகையிலும் புறக்கணிக்கப்படல், உயர் கல்வியினைப் பெறவும், உயர் வேலைவாய்ப்பினைப் பெறவும் மதம் மாற வேண்டும் என்ற நியதி அக்காலத்திலே இருந்தது. இவற்றையெல்லாம் முற்று முழுதாக எதிர்த்துத் தனித்து நின்று போராடிய ஓர் போராளி என்றால் அது நாவலரையே சாரும்.

## "ஞாயிறு போற்றுதும்"

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூரியன் விழித்தால் எதுவும் விழித்ததற்குச் சரி. அது விழிக்காத அளவும் எதற்கு எத்தகைய கண்ணிருந்தும் அது விழித்ததாதல் கூடாது.

சூரியனுக்கும் நமக்குமிடையிலான அத்யந்த உறவின் செறிவு இத்தகையதாகும். இதனாற் சைவத்திற்குரிய வழிபாடு என்பது சிவவழிபாடேயாதல் ஸ்பஷ்டம். பொது மக்கள் மட்டத்திற் பரந்த அளவில் இவ்வழிபாடு நிகழ்தற்கமைந்த நாள் தைப் பொங்கல் திருநாள். சூரியனை முன்னிட்டுப் பொங்கல் நிகழ்த்தி வழிபடும் இவ்வழிபாடு சூரியன் மூலம் சிவனுக்கு நிகழும் சைவ வழிபாடாகும். இது அதன் யதார்த்த நிலை. அது ஒரு உழவர் விழா, பண்டிகை, சமூக விழா என்பதெல்லாம் கோயிற் புற வீதியில் நிகழும் வேடிக்கைகளே. திருவிழா என்பதற்குச் சமமாகும்.

## முழக்கம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப் பாரம்பரியத்தின் சுமைதாங்கிகள் பண்டிதர்கள், வித்துவான்கள். கதி தவறிய இன்றைய சமூகத்திற் பண்டிதர் வித்துவான்களுக்குரிய அந்தஸ்து என்ன? என்பது கேள்வியல்ல. பண்டிதர்கள், வித்துவான்கள் இன்றைய பொருளாதாரத்துக்கு உதவுவார்களா? சமகாலப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பார்களா? என்பது வாதமல்ல. அதற்குரியவர்கள் அவர்களேதாம்.

நம் நாட்டுக்குக் கடல்கடந்து கப்பலில் வந்திறங்கிய கல்விப்புயல் நமது கல்விப் பாரம்பரியத்தின் கைகாட்டியை ஒரு சுழற்றுச் சுழற்றி எதிர்ப்பக்கமாகத் திருப்பச் சந்நத்தங்கொண்டது. முழுமூச்சாக முகங்கொடுத்தார் நாவலர். விடு இங்கே என்று குறுக்கிட்டார். நான் பார்க்கிறேன் என்று மார்தட்டினார். சேர் பொன். இராமநாதன் அவர்களும் இடக்கை வலக்கையாய் நின்றுதவினார். இவர்கள் பின்தோன்றலாகிய 'இந்து போட்' இராசரத்தினம் அவர்களும் இனி நான் என்றெழுந்ததுண்மை. விளக்கற்றம் பார்க்கும் இருள்போல இவர்கள் மறைவற்றம் பார்த்திருந்தது போலும் மற்றது. நிலைமை விபரீதமாயிற்று. கண்டு கண்டு கண்கலுழ்ந் தாழ்ந்தார் பண்டிதமணி. விண்டு விண்டு மெய்ம் மொழிந்தே வந்தார். ஆனால்,

கண்டுங் கண்டுங் காணாதார் தொகையுங் கேட்டுங் கேட்டுங் கேளாதார் பட்டியலும் பெருகியதே கண்டமிச்சம். கண்ணராவி தாங்காமற் கரந்தவர் போலப் பண்டிதமணியும் மறைந்தார்.

## யாழ்ப்பாண உரைநடை வளர்ச்சியில் ஒருகட்டம்

"சகலமான குடியான பேர்களில் எவர்களானாலும் யாதொருத்தரைக்கொண்டு ஓலையிலே யென்கிலும் கடதாசியிலே யென்கிலும் யாதொரு அவகீர்த்தியாக எழுதிப் புறக்கணிக்கும்படிக்கு யாதொரு மரங்களிலே யென்கிலும் வீட்டிற் சிவர் அல்லது சிவர்களிலே யென்கிலும் மறைந்து தூக்கிவைத்தபேர்களை ஒப்பனையுடனே கண்டதுண்டேயானால் ஒவிதோருடைய பணிவிடைப்பேர்களிடத்திலே ஒப்புக்கொடுத்து நன்றாக அடிப்பித்து மூன்று வருஷத்துக்கு விலங்கும் போட்டு ஊழியத்திலே விடுகிற தறியவும். இதுவன்றி எங்கள் இராச்சியத்தின் கீழிருக்கப்பட்ட அவரவருக்குக் கற்பித்துக் கட்டளை பண்ணுகிறோம்.

—நன்றி: கணேசையர் நினைவு மலர் 1960 (தொகுப்பு வித்துவான் F. X. C. நடராசா).

இவ்விதழ் திருநெல்வேலி கலாசாலை வீதி, கலா மண்டபத்தில் இயங்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றத்தினரால், சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1987-01-01 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.